பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

04 09 2026 FRIDAY 7.15 AM

ஆகாஷ்வாணி

தலைப்புச் செய்திகள்

1. வெளிநாட்டு நன்கொடை ஒழுங்குமுறை சட்டத்திருத்த மசோதா குறித்து ஆய்வு செய்வதற்கான 31 உறுப்பினர்கள் கொண்ட நாடாளுமன்ற கூட்டுக்குழுவை மத்திய அரசு அமைத்துள்ளது.
2. போரின் மூலம் எந்த ஒரு பிரச்சனைக்கும் தீர்வுகாண முடியாது என்று வெளியுறவு அமைச்சர் திரு.ஜெய்சங்கர் கூறியுள்ளார்.
3. அரசின் திட்டங்களை உரிய நேரத்தில் நிறைவு செய்ய ஏதுவாக நடைமுறைக்கு உகந்த காலக்கெடு நிர்ணயிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை மத்திய அமைச்சர் திரு.ஜெபி நட்டா வலியுறுத்தியுள்ளார்.
4. ஏமனில் பாதுகாப்பு படையினருக்கும் ஹவுத்தி கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே நடந்த மோதலில் 25 பேர் உயிரிழந்தனர்.
5. சீன மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் – சிராக் ஷெட்டி இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

வெளிநாட்டு நன்கொடை ஒழுங்குமுறை சட்டத்திருத்த மசோதா குறித்து ஆய்வு மேற்கொள்வதற்கான 31 உறுப்பினர்கள் அடங்கிய நாடாளுமன்ற கூட்டுக் குழுவை மத்திய அரசு அமைத்துள்ளது.

மக்களவை உறுப்பினர் திரு சஞ்ஜய் ஜெய்ஷ்வால் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள இந்த குழுவில், Bhartruhari Mahatab, தேஜஸ்வி சூர்யா, நிஷிகாந்த் தூபே, ஆ.ராசா, திருமதி சுப்ரியா சுலே உள்ளிட்டோர் இடம் பெற்றள்ளனர்.

மாநிலங்களவையிலிருந்து திரு.ஹர்ஷ்வர்தன் ஷிரிங்லா, திரு.சஞ்ஜய்குமார் ஜா, திரு. ப்ரஃபூல் பட்டேல், திருமதி. மேனகா குருசாமி உள்ளிட்டோர் இடம் பெற்றுள்ளனர்.

வெளிநாடுகளில் இருந்து பெறப்படும் நன்கொடை தொடர்பான விவரங்களை வெளிப்படை தன்மையுடனும், அதன் பயன்பாடு குறித்த தரவுகளை முறைப்படி சமர்பிக்கவும் இந்த சட்டத்திருத்த மசோதா வழிவகை செய்கிறது.

<<<<>>>>

போரின் மூலம் எந்தவொரு பிரச்சனைக்கும் தீர்வு காண முடியாது என்று இந்தியா தொடர்ந்து வலியுறுத்தி வருவதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் தெரிவித்தார்.

யுக்ரைனின் கீவ் நகரில், அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் திரு ஆண்ட்ரி சிபிஹா உடனான பேச்சுவார்த்தைக்கு பிறகு அவர் இவ்வாறு கூறினார்.

ரஷ்யா-யுக்ரைன் இடையேயான போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு இந்தியா ஆதரவளிக்கும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இத்தகைய மோதல்களின் போது வர்த்தகக் கப்பல் மீது நடத்தப்படும் தாக்குதல்கள் வளரும் நாடுகளுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்துவதாகவும், எரிபொருள், உரம் மற்றும் உணவுப் பற்றாக்குறைக்கு வழிவகுப்பதாகவும் அவர் கூறினார்.

கல்வி, சுகாதாரம், விவசாயம், டிஜிட்டல், புத்தாக்கம், தூதரகப் பயிற்சி மற்றும் மேம்பாட்டு ஒத்துழைப்பு உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு உறவை மேலும் வலுப்படுத்துவது குறித்து அந்நாட்டு வெளியுறவு அமைச்சருடன் விவாதித்தாக திரு ஜெய்சங்கர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

அரசின் திட்டங்களை உரிய நேரத்தில் நிறைவு செய்யப்படுவதை உறுதி செய்ய ஏதுவாக, நடைமுறைக்கு உகந்த காலக்கெடு நிர்ணயிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் திரு ஜே பி நட்டா வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் உள்ள வி.எம்.எம்.சி மற்றும் சஃப்தர்ஜங் மருத்துவமனையில், மேம்பட்ட சிறுநீர்ப்பை நோயறிதல் மையத்தை அவர் திறந்து வைத்தார்.

பின்னர் இந்த மருத்துவமனைகளில் உள்ள இதய சிகிச்சைப் பிரிவு மற்றும் விளையாட்டின் போது ஏற்படும் காயத்திற்கான சிறப்பு சிகிச்சை மையத்தையும் பார்வையிட்ட அவர், இந்த மையங்களில் மேற்கொள்ளப்படும் சேவைகள் மற்றும் செயல்பாடுகளை ஆய்வு செய்தார்.

அணு மருத்துவத் துறையில் புதிதாக நிறுவப்பட்டுள்ள ஸ்கேன் வசதிகள், புற்றுநோய் சிகிச்சை, இதயவியல், நரம்பியல், சிறுநீரக நோய்கள் மற்றும் நாளமில்லா சுரப்பியல் உள்ளிட்ட பல்வேறு சிறப்புத் துறைகளில் மருத்துவமனையின் செயல்பாட்டுத் திறனை மேம்படுத்த உதவிடும் என்று திரு நட்டா கூறினார்.

<<<<>>>>

உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதுடன், ஏற்றுமதி வாயிலாக சர்வதேசத் சந்தைகளுடன் போட்டியிடும் வகையில் வாகன உற்பத்தியாளர்கள் செயல்பட வேண்டும் என்று மத்திய வர்த்தக அமைச்சர் திரு பியூஷ் கோயல் அழைப்பு விடுத்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற இந்திய வாகன உற்பத்தியாளர்கள் சங்கத்தின் வருடாந்திர மாநாட்டில் உரையாற்றிய அவர், இதனைத் தெரிவித்தார்.

உற்பத்தியில் ஏற்படும் உலகளவிலான மாற்றங்கலிருந்து உருவாகும் வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொள்ள தொழில்துறையினர் முன்வர வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

வரும் ஆண்டுகளில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய உந்து சக்தியாக வாகன உற்பத்தித் துறை திகழும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

தொழில்நுட்பம், புத்தாக்கம், ஆராய்ச்சி, திறன் மேம்பாடு மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட சர்வதேச சந்தை வாய்ப்புகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு வாகன உற்பத்தித் துறையின் வளர்ச்சி அமையும் என்று திரு பியூஸ் கோயல் கூறினார்.

<<<<>>>>

உத்தரப்பிரதேசத்தில் பெய்து வரும் கனமழை மற்றும் தடுப்பணைகளிலிருந்து திறந்துவிடப்பட்ட நீரால் 23 மாவட்டங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.

வெள்ள நிலவரம் குறித்து பிரதமர் நரேந்திர மோடி வாரணாசியின் மாவட்ட ஆட்சியர் திரு. சத்யேந்திர குமாருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அங்குள்ள நிலைமை குறித்து கேட்டறிந்தார்.

காசியில் உள்ள நதிகளின் நீர்மட்டம், நிவாரண முகாம்களில் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் குறித்தும் பிரதமர் விசாரித்தார்.

இதனிடையே அம்மாநில முதலமைச்சர் திரு யோகி ஆதித்யநாத் ஃபருக்காபாத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை விமானம் மூலம் பார்வையிட்டார்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை ஆய்வு செய்த அவர், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கு நிவாரணப் பொருட்களை வழங்கினார்.

இந்நிலையில் சித்ரகூட்டில் மந்தாகினி ஆற்றின் நீர்மட்டம் மேலும் உயர்ந்து வருவதால், அப்பகுதிகளில் வசிக்கும் மக்கள் உடனடியாகப் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

<<<<>>>>

இந்தியாவின் உற்பத்தி திறனுடன் பெல்ஜியத்தின் தொழில்நுட்பத்தை இணைப்பதன் மூலம், முக்கியத்துவம் வாய்ந்த பாதுகாப்பு தளவாடங்களை மேம்படுத்த முடியும் என்று பாதுகாப்புத்துறை இணையமைச்சர் திரு.சஞ்ஜய் சேத் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற இருநாடுகளின் பாதுகாப்புத்துறையின் தலைமை செயலாளர்கள் மாநாட்டில் உரையாற்றிய அவர் இதனை தெரிவித்தார்.

சைபர் பாதுகாப்பு, செயற்கை நுண்ணறிவுடன் கூடிய ஆளில்லா விமானங்கள், நீருக்கு அடியில் இயங்கும் வாகனங்கள் உள்ளிட்ட துறைகளில், இருநாடுகளும் பரஸ்பரம் தங்களது வலிமையை அதிகரித்துக்கொள்ள முடியம் என்று தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு துறையில் அந்நிய நேரடி முதலீடுகளை ஈர்க்கும் வகையில் சீர்த்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக திரு.சஞ்ஜய் சேத் கூறியுள்ளார்.

<<<<>>>>

ஏமனில் பாதுகாப்பு படையினருக்கும் ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே நடந்த மோதலில் 25 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஏமன் நாட்டின் Tiaz மாகாணத்தின் தென்மேற்கு பகுதியில் இந்த மோதலில் பாதுகாப்பு படையை சேர்ந்த 15 வீரர்களும், ஹவுதி அமைப்பை சேர்ந்த 10 பேரும் உயிரிழந்ததாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேபாளத்தில் ஏற்பட்ட வெள்ளத்தில் காணாமல் போனவர்களின் நெருங்கிய உறவினர்களது டிஎன்ஏ மாதிரிகளைப் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்தியாவில் வசிக்கும் நெருங்கிய உறவினர்கள், குறிப்பிட்ட சில மையங்களில் தங்களது டிஎன்ஏ மாதிரிகளை அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கென இந்தியாவில் உள்ள மத்திய தடய அறிவியல் ஆய்வகங்கள், மாநில தடய அறிவியல் ஆய்வகங்கள் மற்றும் தேசிய தடய அறிவியல் பல்கலைக்கழக ஆய்வகம் உள்ளிட்ட பல்வேறு அரசு அங்கீகாரம் பெற்ற ஆய்வகங்களில் வசதி செய்யப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது

நேபாள காவல்துறை அறிவுறுத்தலின் பேரில், உயிரிழந்தவர்களை அடையாளம் காணும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

டிஎன்ஏ மாதிரி குறித்த விபரங்களை அந்நாட்டு அதிகாரிகளுக்கு பிரத்யேக மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

மணிப்பூரில், இயல்பு நிலை திரும்புவதற்கும், மறுவாழ்வு மற்றும் பொருளாதார, சமூக நடவடிக்கைகளை மீட்டெடுப்பதற்கும் உகந்த சூழலை உருவாக்குவதற்கும் மாநில அரசு பணியாற்றி வருவதாக அம்மாநில முதலமைச்சர் திரு யும்னம் கெம்சந்த் சிங் தெரிவித்துள்ளார்.

அம்மாநில மாநிலச் சட்டப்பேரவையில் இது தொடர்பான விவாதத்திற்கு பதிலளித்த அவர், பாதிக்கப்பட்டவர்களில் 59 ஆயிரம் பேருக்கு மாநில அரசு தொடர்ந்து நிதியுதவி வழங்கி வருவதாகவும் முதலமைச்சர் குறிப்பிட்டார்.

மாநிலம் முழுவதும் உள்ள பல்வேறு நிவாரண முகாம்களில், 24 ஆயிரம் பேர் இருப்பதாகவும், அவர்களுக்கான மறுவாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான வழிவகைகளை கண்டறிவதற்காக, ஏழு சங்கங்களின் பிரதிநிதிகள் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இம்பால்-திமாபூர்-குவஹாத்தி இடையேயான பயணிகள் பேருந்து சேவை மீண்டும் தொடங்கப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டிய அவர், Moreh வர்த்தகப் பாதையை மீண்டும் செயல்பாட்டிற்கு கொண்டு வருவதற்கானப் பணிகளை அரசு மேற்கொண்டு வருவதாகத் திரு யும்னம் கெம்சந்த் சிங் தெரிவித்தார்.

<<<<>>>>

சீன மாஸ்டர்ஸ் பேட்மின்டன் போட்டியில், இந்தியாவின் Satwiksairaj - Chirag SHETTY இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை 21-17, 22-24, 21-9, என்ற செட் கணக்கில், பிரான்சின் Christo POPOV - Toma Junior POPOV இணையை வென்றது.

<<<<>>>>

அல்மாட்டி டேபிள் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் Diya Chitale - Yashashwini Ghorpade, Syndrela Das - Sutirtha Mukherjee இணை, காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் Diya Chitale - Yashashwini Ghorpade இணை, 11-8, 10-12, 11-6, 11-9, என்ற செட் கணக்கில் ரஷ்யாவின் Valeriia SHCHERBATYKH - Maria PANFILOVA இணையை வென்றது.

மற்றொரு ஆட்டத்தில் இந்தியாவின் Syndrela Das - Sutirtha Mukherjee இணை, 11-8, 11-2, 8-11 11-8, என்ற செட் கணக்கில் கஜகஸ்தானின் Aray ASHKEYEVA - Nursaya NURMAN இணையை வென்றது.

<<<<>>>>

ஆசிய கோப்பை மகளிர் டுவெண்ட்டி - டுவெண்ட்டி கிரிக்கெட் போட்டியில், இந்திய அணி 137 ரன் வித்தியாசத்தில் ஹாங்காங் அணியை வென்றது.

துபாயில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் ஆடிய இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 5 விக்கெட் இழப்பிற்கு 193 ரன் எடுத்தது.

இதனையடுத்து, 194 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய ஹாங்காங் அணி 16 புள்ளி இரண்டு ஓவரில் 56 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

<<<<>>>>